WA digital inclusion project

# கணினித் திறன் பயிற்சி – ‘ஸ்மார்ட்-ஃபோன்’கள்

## ‘சமூக வெற்றியாளர் திட்டம்’

2025

lotterywest

wacoss wa council of social service

# பயிற்றுநருக்கான குறிப்புகள்: ‘ஸ்மார்ட்ஃபோன்’-குறித்த அறிமுகம்

- பங்குபற்றுநர்களுக்காக இந்தக் கையேடுகளை அச்சிட்டுக்கொள்ளுங்கள்:
  - **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ ஆயத்தப்படுத்துல் (‘‘ஐ-ஃபோன்’)**
  - **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ ஆயத்தப்படுத்துல் (‘ஆண்ட்ராய்ட்’)**
- இந்தப் பாடத்தை அளிக்கும் பொழுது உங்களுடைய பயன்பாட்டிற்காக இந்த ஒளித்தகடுகளின் பிரதி ஒன்றை, குறிப்புகள் உள்ள பகுதியுடன் அச்சிட்டு வைத்துக்கொள்ளுங்கள்.
- வாசியுங்கள்:
  - இந்த ஒளித்-தகடுகளை வாசித்து அவற்றில் அடங்கியுள்ள விடயங்கள் உங்களுக்குப் பரிச்சியமானவை என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்,
- பங்குபற்றுநர்களுக்கான கையேட்டினை வாசியுங்கள். உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருப்பின், அமர்விற்கு முன்பாக ‘எலியட்’ அவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள் Elliot@wacoss.org.au
- ***காட்சிப்படுத்துவதற்கு முன்பாக இந்த ஒளித்-தகட்டினை அகற்றுங்கள்/ மறைத்துவையுங்கள், மற்றும் கடைசி ஒளித்தகட்டில் அடுத்த அமர்விற்கான நேரம்/ திகதியைப் புதுப்பியுங்கள்.***

# இந்த நாட்டு பூமிக்காக பூர்வ பழங்குடியினருக்கு நன்றி நவிலல்

ஆபோரிஜினிப் பூர்வகுடி மக்களது நிலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை நாமறிவோம். இந்த நிலங்களைச் சேர்ந்த ஆபொரிஜினி மக்களுக்கு நாங்கள் மதிப்பு–மரியாதை செலுத்துகிறோம். ஆபொரிஜினிப் பூர்வகுடி மக்கள் பல ஆண்டுகளாக இந்த நிலத்தில் பல ஆண்டுகளாக வாழ்ந்துவருகின்றனர்.

ஆபொரிஜினிப் பூர்வகுடிகள் அனைத்தொர்ரையும் அவர்களது மூத்தொர்களையும் நாங்கள் மதித்து அவர்களுக்கு மரியாதை செலுத்துகிறோம்.

அவர்களது கதைகளிலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள இயலுமானது ஏராளமாகும்.

இந்த பூமி எப்போதுமே ஆபொரிஜினிப் பூர்வகுடியினருடையதாகவே இருந்துவந்திருக்கிறது, இனியும் அவ்வாறே நீடிக்கும்.

# ‘ஸ்மார்ட்-ஃபோன்’- ஒரு அறிமுகம்

WA Digital Inclusion Project

# இந்த அமர்வின் மேலோட்டம்

- **இந்த அமர்வு பின் வருவனவற்றை உள்ளடக்கும்:**
- **‘ஸ்மார்ட்-ஃபோன்’ ஒன்றின் அடிப்படையான இயங்கும் விதங்களை விளங்கிக்கொள்ளல்**

‘ஸ்மார்ட்-ஃபோன்’ என்றால் என்ன என்பதையும் அதன் பிரதானமான பயன்பாட்டுகளையும் தெரிந்துகொள்ளுங்கள்.

- **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-இல் இருந்து துவங்குங்கள்.**

உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ எப்படி ‘சார்ஜ்’ செய்வது, முடுக்கிவிடுவது மற்றும் பயன்பாட்டிற்காக அதை எப்படி ஆயத்தப்படுத்துவது என்று தெரிந்துகொள்ளுங்கள்.

- **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ பாதுகாப்பான முறையில் இயக்கி அதைப் பயன்படுத்துங்கள்.**

அடிப்படையான அம்சங்கள் என்ன என்று தெரிந்துகொள்ளுன்கள், மற்றும் இணையத்தைப் பாவிக்கும் பொழுது பாதுகாப்பாக இருங்கள்.

# அறிமுகங்கள்

- குழுவினருக்கு உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்.
- உங்களைப் பற்றி அவர்களுக்குத் தெரியாத ஆர்வமூட்டும் விடயம் ஒன்றைப் பற்றி அவர்களுக்குச் சொல்லுங்கள்!



# ‘ஸ்மார்ட்-ஃபோன்’களைப் பற்றி விளங்கிக்கொள்ளல்’

- இந்தக் காணொலியைப் பாருங்கள்:

https://vimeo.com/879269983

‘ஸ்மார்ட்-ஃபோன்’ என்றால் என்ன, மற்றும் அதை நீங்கள் எதற்குப் பாவிக்கலாம்?

# ‘ஸ்மார்ட்-ஃபோன்’ ஒன்றில் இருந்து துவங்குதல்



- உங்களுடைய ‘ஃபோன்’-ஐ ‘சார்ஜ்’ செய்தல்
- உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ முடுக்கிவிடல்
- உங்களுடைய ‘ஃபோன்’-ஐ ஆயத்தப்படுத்துதல்
- **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ ஆயத்தப்படுத்துல் (‘ஆண்ட்ராய்ட்’)**
- **உங்களுடைய ‘ஸ்மார்ட்-ஃபோன்’-ஐ ஆயத்தப்படுத்துல் (‘‘ஐ-ஃபோன்’)**

# உங்களுடைய ‘ஃபோன்’ ஊடாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்




- முகப்புப் பக்கம்
- செயலிகள்
- எழுத்துச்–செய்திகள் மற்றும் செய்திகள் அனுப்பல்
- அழைப்புகளைச் செய்தல் மற்றும் அவற்றை ஏற்றுக்கொள்ள.

# இணையத்தில் பாதுகாப்பாக



# நான் செல்வதற்கு முன்பாக

பின் வருவனவற்றை உங்களால் செய்ய இயலுகிறதா என்று  பாருங்கள்:

- **மின்னேற்றம் (‘சார்ஜிங்’)**
  - ‘ஃபோன்’–ஐ முடுக்கிவிடல்
  - அதை ‘சார்ஜ்’ செய்தல்
- **தொடர்பாடல் கொள்ளல்**
  - அழைப்பைச் செய்தல், ஏற்றுக்கொள்ளல்
  - செய்திகளை அனுப்பல் மற்றும் வாசித்தல்
- **இணைப்பு ஏற்படுத்தல்**
  - ‘மொபைல் டேட்டா’–வை முடுக்கிவிடல்/ மூடல்
  - ‘வை–ஃபை’’ (Wi-Fi)–யுடன் இணைத்தல்
- **செயலிகள்**
  - செயலிகளைக்  கண்டுபிடித்தல்
  - செயலிகளை இறக்கம் செய்தல் (வங்கி–வேலைகள், ‘மேப்’ படங்கள்)
- ‘ஃபோட்டோ’ ஒன்று எடுத்தல்
- ‘இண்ட்டெர் நெட் ப்ரவுசர்’–ஐக் கண்டுபிடித்தல்
- ‘அலாரம்’ அல்லது ‘நினைவூட்டி’ ஒன்றை அமைத்துக்கொள்ளல்.

# வாருங்கள், கலந்துரையாடலாம்.

**1. புதிய 'ஸ்மார்ட்ஃபோன்' ஒன்றை 'செட்-அப்' செய்யும் பொழுது முதலில் என்ன செய்யவேண்டும்?**
a) செயலிகளை இறக்கம் செய்தல்
b) 'ஃபோன்'-ஐ 'சார்ஜ்' செய்தல்
c) 'ஃபோன்'-ஐ முடுக்கிவிட்டு, 'செட்-அப்' செய்வதற்கான அறிவுறுத்தல்களைப் பின்பற்றல்
d) அழைப்பு ஒன்றைச் செய்தல்

**2. உங்களுடைய 'ஸ்மார்ட்ஃபோன்'-இற்கு ஏற்ற 'சார்ஜர்'-ஐப் பாவிக்கவேண்டியது ஏன் முக்கியம்?**
a) 'பேட்டரி-க்கு சேதம் ஏற்படுத்தாமல் இருக்க
b) 'ஃபோன்'-ற்கு விரைவில் 'சார்ஜ்' ஏற்ற
c) பார்ப்பதற்கு, 'ஃபோன்' வடிவாக இருக்க
d) பணம் சேமிக்க

**3. சந்தேகத்திற்குரிய செய்தி அல்லது மின்னஞ்சல் ஒன்று வரும்பொழுது நீங்கள் என்ன செய்யவேண்டும்?**
a) அதைப் புறக்கணியுங்கள்
b) அது என்ன என்று தெரிந்துகொள்ள, இணைப்புகள் எதன் மீதும் சொடுக்குதல்
c) அதைப் பற்றி புகார் செய்து அதை நீக்கிவிடல்
d) அதை நண்பர்களுக்கு மேற்கொண்டு அனுப்பல்

**4. 'உங்களுடைய 'ஸ்மார்ட்ஃபோன்'-இல் உள்ள உங்களைப் பற்றிய தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது எவ்வாறு?**
a) நீங்கள் நம்பும் நண்பர்களுடன் அவற்றைப் பகிர்ந்துகொள்ளல்
b) அவற்றை அந்தரங்கமாக வைத்திருத்தல், மற்றும் வலுவான கடவுச்சொற்களைப் பாவித்தல்
c) சமூக ஊடகங்களில் அவற்றை வெளியிடல்
d) அவற்றை எழுதி உங்களுடைய 'வாலெட்'-இல் வைத்திருத்தல்

# அமர்வின் மேலோட்டத்தை மீண்டும் பார்வையிடல்

- **‘ஸ்மார்ட்ஃபோன்’ ஒன்றின் அடிப்படையான செயற்பாடுகளை விளங்கிக்கொள்ளல்.**

  ‘ஸ்மார்ட்ஃபோன்’ என்றால் என்ன என்பதையும் அதன் பிரதானமான

  பயன்களையும் கற்றுக்கொள்ளல்

- **உங்களுடைய ‘ஸ்மார்ட்ஃபோன்’- இல் இருந்து துவங்குங்கள்.**

  உங்களுடைய சாதனத்தை எப்படி ‘சார்ஜ்’ செய்வது, முடுக்கிவிடுவது மற்றும்

  ‘செட்-அப்’ செய்வது என்று கற்றுக்கொள்ளுங்கள்.

- **உங்களுடைய ‘ஸ்மார்ட்ஃபோன்’-ஐப் பாதுகாப்பாகப் பாவியுங்கள்.**

  அடிப்படையான அம்சங்களைப் பற்றியும், இணையத்தில் பாதுகாப்பாக

  இருப்பது எப்படி என்பதைப் பற்றியும் கற்றுக்கொள்ளுங்கள்.

- மேலதிகத் தகவல்கள் தேவையா?
  - இந்தக் கையேட்டினை வாசியுங்கள், அல்லது.
  - கீழ்க் காணும் வலைப்பக்கத்திற்குச் செல்லுங்கள் https://beconnected.esafety.gov.au/topic-library/computer-basics-for-beginners/what-is-a-smartphone அல்லது
  - “Be Connected get to know your smartphone” என்பதை ‘கூகுள்’-இல் தேடிப்பாருங்கள்.

# நன்றி!

அடுத்த அமர்விற்கான நேரம்: